துவரையை நெல் வயல்களில் பரப்புகளிலும் கரும்பு, வாழைத் தோட்டங்களில் வரப்போரப் பயிராகவும் பயிரிடுவதற்கு 10 ஆயிரம் ஏக்கர் எடுத்துக்கொள்ளத் திட்டமிடப்பட்டிருக்கிறது.

மண்வளப்பாதுகாப்புத் திட்டம்

* 457 வினா—திரு. சு. துரைசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கோவை மாவட்டத்தில், பல்லடம், அவினாசி வட்டங்களில் முழு அளவில் மண் "அரிப்பு திட்டம்" அமுல் படுத்தும் நோக்கம் அரசுக்கு உண்டா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த பல்லடம், அவினாசி வட்டங்களிலுள்ள எல்லாக் கிராமங்களின் பகுதிகள் அனைத்திலும் நிறைவேற்றப் படுவதற்கென மும்முர மண் வளப்பாதுகாப்புத் திட்டம் ஏதுமில்லை. அந்த வட்டங்களிலுள்ள தெரிந்தெடுத்த கிராமங்களில் வழக்கமான மண் வளப் பாதுகாப்புத் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

திரு. சு. துரைசாமி: தலைவர் அவர்களே, அவினாசி, பல்லடம் போன்ற பகுதிகள் நீர்ப்பாசன வசதி இல்லாதவை. மழையை நம்பித்தான் அந்தப் பகுதிகள் இருக்கின்றன. ஆகவே, மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தை விரைவிலே ஏற்படுத்த நடவடிக்கை எடுத்துக்கொண்டு வர அரசு முயற்சி எடுக்குமா? திருப்பூர் ஊராட்சிக்கு முதற்படியாக இத்திட்டம் நிறைவேற்றப்படுமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம்: தலைவர் அவர்களே, எல்லா மாவட்டங்களிலும் இப்படிப்பட்ட ஆராய்ச்சி வேலைகள் நடைபெற்று வருகின்றன. 1971–72-ல் அவினாசி வட்டத்தைச் சேர்ந்த 45 கிராமங்களிலுள்ள 2,625 ஏக்கர்களையும், பல்லடம் வட்டத்தைச் சேர்ந்த 37 கிராமங்களிலுள்ள 1,825 ஏக்கர்களையும் வழக்கமான மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ்க் கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் மாவட்டத்தைச் சேர்ந்த அவினாசி, பல்லடம் வட்டங்களிலுள்ள பல்வேறு கிராமங்களில் 1—10—1964 முதல் 31—3—1971 வரை உள்ள காலத்தில் மண்வளப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் அதிகமான அளவு எடுக்கப்பட்டு, இதைத் தீவிரப்படுத்தும் திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது.

Backward Classes Commission Report

* 458 Q.—THIRU K. S. KOTHANDARAMIAH : THIRU DURAI MURUGAN : Will the Hon. the Minister for Backward Classes be pleased to state :

(a) whether the Government have received the report of the Chairman of the Backward Classes Commission; and

(b) if so, the details thereof?